1981 மே 14]

விளவங்கோடு தொகுதி கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 1046—திரு. டி. மணி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க அரசு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கியுள்ளதா?

(ஆ) அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) (1) ஏணையம் (விரிவாக்கம்)

(2) முள்ளூர்த்துறை

(3) இராமன்துறை

(4) நீரோடைத்துறை

ஆகிய இடங்களில் வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ஏணையம் (விரிவாக்கம்), இராமன்துறை ஆகிய இடங்களில் வேலைகள் துவக்கப்பட்டுவிட்டன. முள்ளூர்த்துறை வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. நீரோடைத்துறையில் வேலைகள் துவக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வி விளவங்கோடு தொகுதியில் கடலோரப் பகுதியில் கடல் ஆக்கிரமிப்பைத் தடுப்பது சம்பந்தமானது. 1977–லிருந்து அந்த விளவங்கோடு தொகுதியிலே ஏரானியம் துறை என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே ஒரு மாதாகோயில் இருக்கிறது, அந்த மாதா கோயில் உள் படிக்கட்டு வரையிலும் 4 முறை கடல் ஆக்கிரமித்துள்ளது. பல்வேறு கிராமங்களிலே, ஏரேனியம்துறை, தூத்தூர், பூத்துறை போன்ற பல்வேறு பகுதிகளிலே கடல் ஆக்கிரமித்து, பல்லாயிரக்கணக்கான ரூபாய்மதிப்புள்ள வீடுகள் சேதம் அடைந்துள்ளன. ஆனால் நாகர்கோவிலில் இருக்கிற கடல் அரிப்புக் கோட்டம் என்று சொல்கிற அலுவலக அதிகாரியை நான் சந்தித்தபொழுது அந்தப் பகுதியைப்பற்றி எந்தத் தகவலும் அவர்கள் சொல்லத் தயாராக இல்லை. எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் விளவங்கோடுபகுதியிலே நீரோடி நீங்கலாப் இருக்கிற இதரப் பகுதியிலே இந்த கடல் அரிப்பைத் தடுப்பதற்கு இந்த நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1981 மே 14

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட பொறியாளரைப் பற்றி இங்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஆனால் அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தொகுதியில், தாலுகாவாரியாக: விளவங்கோடு தாலுகாவில் 16 கிராமங்களையும், கல்குளம் தாலுகாவில் 12 கிராமங்களையும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் 13 கிராமங்களையும் சேர்த்து, 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு கடல் ஓரமாக அரிப்புத் தடுப்புச்சுவர் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ரூ, 590 இலட்சம் மதிப்பீட்டிலே திருத்தப்பட்ட பெருந்திட்டம் ஒன்றை மாநில அரசு தயார் செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரை ஓரத்தில் வசிக்கும் மீனவர்கள் வீடுகள், விலை மதிப்புமிக்க சொத்துக்கள், மற்றும் அன்னாரின் உயிர்கள் அங்கு அடிக்கடி ஏற்படும் கடல் அரிப்பின் காரணமாக அழிக்கப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள திருத்தப்பட்ட பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் பெறாத அளவில் இருக்கும்போதே தவிர்க்க முடியாத அவசியத்தின் காரணமாக, மாண்புமிகு புரட்சித் தலைவரின் தமிழக அரசு கீழ்க்குறிப்பிட்ட கிராமங்களுக்கு கடல் அரிப்பினால் ஏற்படும் நட்டங்களைத் தடுப்பதற்கு 1979-80 மற்றும் 1980-81 ஆண்டில் கடல் தடுப்புச் சுவரைக் கட்டுவதற்காக விளவங்கோடு தாலுகாவிலே ஏனைய 'விரிவாக்கத்திற்காக 135 மீட்டரில் ரூ. 2,54,000-க்கும், விளவங்கோடு முள்ளூர் துறையிலே 335 மீட்டர் நீளத்திற்கு ரூ, 6 இலட்சம் செலவிலும், இராமன்துறை 250 மீட்டர் நீளத்திற்கு ரூ.15 இலட்சம் செலவிலும், விளவங்கோடு நீரோடித்துறையிலே அடுத்த 100 மீட்டரிலே ரூ 14 இலட்சத்திற்கும் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீரோடைத் துறையிலே கற்கள் எடைபோடும் இயந்திரம் வரப்பெற்று நிறுவப்படும் நிலையில் உள்ளது. வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. மணி: மாண்புமிகு அமைச்சர் பல்வேறு விவரங்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இந்த விவரங்களைப் பார்க்கிறபோது ஏற்கனவே அவர் கொடுத்திருக்கிற தகவலில் விளவங்கோடு தொகுதி அதில் உட்பட்டதல்ல. அதிலே வராது. ஆகவே மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதல் கிடைக்கிறபோது இந்த எரேனியம் துறை, பூத்துறை, தூத்தூர் என்று நான் குறிப்பிட்டிருக்கிற அந்த இடங்களை இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

1981 மே 14]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, கண்டிப்பாக அது சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கடலோரத்தில் ஏற்பட்டிருக்கிற கடலரிப்பைத் தடுக்க தற்போது எங்கெங்கே பணிகள் நடந்து வருகின்றன. குமரி மாவட்டத்தில் கடலரிப்பைத் தடுக்க எத்தனை இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட குறிப்பு என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் தனியாக கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. போப் ஆண்டவர் விரைவில் நலம் பெற வாழ்த்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஒரு முக்கியமான குறிப்பினைக் கொண்டு வர நான் விரும்புகிறேன். போப் ஆண்டவர் 2-வது ஜான் பால் அவர்கள் நேற்று எதிர்பாராத வகையில் வாடிகன் நகரில் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பொது மக்களுக்கு காட்சி அளிக்க வருகை தந்தபோது அவர் சுடப்பட்டார் என்றும் அவர் கவலைக்கு இடமான வகையில் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும் செய்தித் தாள்களில் வந்த செய்தி நமக்கெல்லாம் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேதான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலும் உலகத்திலே வாழ்கின்ற கத்தோலிக்க கிருத்துவர்கள் அத்தனை பேர்களுடைய நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெற்ற அவர் எதிர்பாராத வகையில் சுடப்பட்டார் என்பது நமக்கெல்லாம் அதிர்ச்சியைத் தருகிற ஒன்றாக அமைந்திருக்கிறது. என்றாலும் அவருடைய இருதயமும், நுரையீரலும் நல்ல முறையில் வேலை செய்கின்றன என்றும், குண்டு அடிவயிற்றிலே பாய்ந்திருக்கிறது என்றும், கழுத்துக்குப் பக்கத்திலேதான் பாய்ந்திருக்கின்றது என றும், இருந்தாலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அவர் நிதானத்தோடு இருக்கிறார் என்றும் செய்திகள் வந்திருக்கின்றன. கவலைப்படுவதற்கில்லை என்று செய்தி வருகிறது. இருந்தாலும் அவர்கள் கவலைக்கிடமான வகையிலேதான் இன்னும் 2, 3 நாட்களுக்கு இருக்கவேண்டும் என்றும் செய்திகள் வந்திருக்கின்றன. இருந்தாலும் இந்த அவையின் சார்பாக தங்களின் மூலமாக இந்த அவை தன்னுடைய நல்ல எண்ணத்தையும் விருப்பத்

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

831ம் பக்க இணைப்பில் பார்க்க